# The First Lord of Valvettithurai's Seafarers


## வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் "முதல்தெய்வமே" கப்பலுடையவர்!...........




மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
**வருணன் மேயபெருமணல் உலகமும்**
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

(தொல்காப்பியம்)

இதற்கு உரை எழுதிய "நச்சினார்கினியார்" கருங்கடற்கடவுள் காதலித்த நெடுநகோட்டெக்கர் என இதற்கு பொருள் கூறினார். கருங்கடற் கடவுள் என்பது வருணபகவானைக் குறிக்கும். இவ்வுரையானது. "பெருமணல்கள் குவிந்திருக்கும் கடற்கரைப்பகுதியில் வணங்கப்படும் தெய்வம்" எனவே பொருள்தருகின்றது. தொல்காப்பியத்துக்கு பின்வந்த எந்த நூல்களிலும் கடற்தெய்வமாக வருணன் என்னும் பெயர் குறிப்பிடப்படாத போதும் காஞ்சிப்புராணம் உட்பட வேறு வேறுபல புராணங்களில் மழைத்தெய்வமாக வருணன் உவமிக்கப்படுவதை நாம் காணலாம். கடலில் உள்ள நீர் ஆவியாகி மழை மேகமாகின்றது. மேகம் குளிர்ந்து மழையாகி மீண்டும் கடலில் பொழிகின்றது. நதிகளில் பொழியப்படும் நீரும் இறுதியில் கடலையே அடைகின்றது. இவ்வகையில் மழைத் தெய்வமும் கடல் தெய்வமும் ஒன்றே ஆகின்றது. இந்துக்களினால் வருணன் மழைத்தெய்வமாக வணங்கப்படும் பொழுது பௌத்தமத நூலான மஹாவம்சம் பஜ்ஜன் (**pajjunna**) என்பவரை மழைத் தெய்வமாக குறிப்பிடுகின்றது.



ஆரியப்பண்பாட்டின் முன் இயற்கையை இறைவனாக வழிபட்ட மக்களின் வழிபாடும் **"தெய்வஆடலும்"** இரண்டறக்கலந்த ஒன்று. வெற்றித் திருமகளாம் "கொற்றவை" என்னும் பெண்தெய்வத்தை வழிபடும் போது நடக்கும் ஆடலினை சிலப்பதிகாரம் "வேட்டுவவரி" யின் 6-11 வரிகள் பின்வருமாறு விளக்குகின்றது.

**வழங்குவில் தடக்கை மறக்குடித்தாயத்துப்
பழங்கடன் உற்ற முழங்குவாய்ச் சாலினி
தெய்வம் உற்று மெய்மயிர் நிறுத்துக்
கைஎடுத்து ஒச்சிக் கானவர் வியப்ப
இடுமுள் வேலி எயினர் கூட்டுண்ணும்
நடுஊர் மன்றத்து அடிபெயர்த்து ஆடிக்
"கல்என் பேர்ஊர்க் கணநிரை சிறந்தன"**

சாலினி என அழைக்கப்படும் பெண்பூசாரி கையில் வில்லேந்திய மறவர் குடியில் பிறந்து வளர்ந்தவள். அவள் தன் ஊர் நடுவே உள்ள கொற்றவையின் கோவிலின் முன்னே தெய்வம் ஏறப்பெற்று (உருவந்தவளாய்) தன்னிலை மறந்து கைகளைக் கால்களை அப்படியும் இப்படியும் அசைத்து ஆடியபடியே கண்ணகிக்கு குறி சொல்லுவாள்.

இது போன்றதே முருகன் என்னும் வேலன் பற்றிய வழிபாடும் ஆகும். இங்கு குறிப்பிடும் **"தெய்வஆடல்"** என்பது **"வேலன்வெறியாடல்"** எனப்படுகிறது இதனை **"மதுரைக்காஞ்சி"**யின் 611-619ம் அடிகள் பின்வருமாறு விளக்குகின்றது.

**அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
அரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகுநெடுவேட் பெணித் தழூஉப்பிணையுாஉ
மன்றுதொறு நின்ற குரவை சேரிதோறும்
உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ
வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்
பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரிவிழவின் ஆர்ப்பெழுந் தாங்கு**

வேலன்வெறியாடத் தொடங்கினான். இசைகருவிகள் பலவும் ஒன்று கலந்து இசையைப் பொழிந்தன. கார்காலத்தில் மலரும் குறிஞ்சி மலரை அவர்கள் அணிந்து கொண்டனர். கடம்பமலர் மாலை அணிந்த முருகனின் கைவேலை தமது நெஞ்சில் பொருத்திக் கொண்டனர். அவ்வாறே ஊரின் மன்றுதேறும் ஆடினர். ஊர்தேறும் அவன் பெருமையை பாட்டாகப் பாடினர். பல்வேறு வகையாக ஆடினர்.

இவைபோலவே நெய்தல் நிலமான கடற்கரையோர மக்களும் தமது தெய்வமான வருணனை ஆடல் பாடலுடன் தொழுது வணங்கினர். அவ்வேளையில் குறிப்பாக பெரிய சுறா எலும்புகளை நிலத்தில் நட்டும் பனங்கள்ளைக் குடித்தும் ஆணும் பெண்ணும் தமக்கு பிடித்தவர்களுக்கு தாழை (கத்தாழை) மலரின் மாலையைச் சூடியும் கடலுக்கு போகாத முழுமதிநாளான பௌர்ணமி நாளில் இவ்வாறே தமது பொழுதைக்கழிப்பர். எனக் கூறும் நச்சினார்க்கினியார் முதல் பின்வந்த தமிழ் அறிஞர்களான பி.டி.சீனிவாசஐயங்கார் வரை வருணவழிபாட்டின் எச்சமாக குறிப்பிடும் பட்டினப்பாலையின் 81-92ம் அடிகள் பின்வருமாறு

"நிலவு அடைத்த இருள்போல
வலை உணங்கும் மணல் முன்றில்
வீழ்தாழைத் தாள் தாழ்ந்த
வெண் கூதாளத்துத் தண்பூங்கோதையர்
சினைச்சுறாவின் கோடு நட்டு
மனைச்சேர்த்திய வல் அனங்கினான்
மடல்தாழை மலர்மலைந்தும்
பிணர்பெண்ணைப் பிழி மாந்தியும்
புன்தலை இரும்பரதவர்
பைந்தழை மா மகளிரோடு
பாயிரும் பனிக்கடல் வே(ா)ட்டம் செல்லாது"

இவ்வாறான **கடல்தெய்வமான** வருணவழிபாட்டு முறையானது வல்வெட்டித்துறையில் இன்று பெருமளவு மறைந்துள்ளது. எனினும் **வல்வெட்டித்துறை** மக்களின் ஆரம்ப காலவழிபாடானது இவ்வகையானதேயாகும். இதன் எச்சமாக இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பும் **மீன் கூழ் கள்** என்பனவற்றை படைத்து ஆடல் பாடலுடன் களியாட்டமாக மக்கள் வழிபட்ட தெய்வம் தான் "**கப்பல்கிழவன்**" என அழைக்கப்படும் தெய்வமாகும்.

கடல்தெய்வமாம் வருணபகவானை காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் வழிபட்டதனை கூறும் பட்டினப்பாலை வரிகள் உரைப்பது போன்ற இயற்கைவழிபாடானது இருபதாம் நுற்றாண்டின் நடுப்பகுதிவரை இக்கோவிலின் முன்றலில் **வல்வெட்டித்துறை** மக்களால் கைக்கொள்ளபட்டுள்ளது. இத்தகையவழிபாடானது கிறிஸதவிற்கு பின 150----180 ஆண்டுகளிலகளில் வாழ்ந்த "கரிகால்ச்சோழனுடைய" காலவழிபாடென பட்டினப்பாலை ஆசிரியரான "கடியலூர்" உருத்திரங்கண்ணனார் உரைக்கின்றார். அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்துடன் கடற்தொடர்புகளை வைத்திருந்த வல்வெட்டித்துறையில் இருபதாம் நூற்றாண்டின இறுதிவரை இத்தகையவழிபாடு நின்று நிலைத்துள்ளமை ஆச்சரியமல்ல. இவ்வகைவழிபாடு இம்மண்ணின் தொன்மைக்கும் இன்றும் கடலைத்தமது தெய்வமாக வணங்கும் இம்மண்ணின் மைந்தர்களின் பெருநம்பிக்கைக்கும் சான்றாகும். பலநூற்றாண்டுகளின் முன்பே காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கிவிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கடல்தாண்டி கப்பலில் செல்வோரும் கடல்மீது மீன்பிடிக்கச் செல்வோரும் தமக்குத் துனையாக தாம் வணங்கும் கடவுளையே எப்போதும் நினைத்துக் கொள்வர். பொதுவாகவே மழையும் புயலும் சேர்ந்தடிக்கும் காலங்களில் கடல் பொங்கி ஆகாயத்தில் ஒளிதரும் நட்சத்திரங்களும் மறைந்துவிடும். அலைகளினால் கப்பல்களும் படகுகளும் பந்தாடப்படும்போது கடலோடிகளின் துணையாக வருணபகவானே முன்னிப்பார். என்பது ஐதீகம். இக்காலத்தைப் போல வானெலித்தொடர்பாடல் எதுவுமின்றி கருமையான கடலிலே தனிமையாக நிற்கும் படகானது காற்றின் போக்கிற்கும் அலையின் வீச்சிற்குள்ளும் சிக்கிசசுழலும் போது இடிஇடிக்கும் அவ்வேளையில் உடலின் இயக்கமே நின்றுவிடும். அக்காலத்தில் "மழைத்தெய்வமான" வருணபகவானையும் அவர் மகனான அருச்சுனனையும் கடலோடிகள் கூவி அழைப்பர்

இன்றும்கூட இடிஇடிக்கும்போது "வருணபகவானுக்கு அரோகரா.........அருச்சுனருக்கு............அரோகரா........எனகுரலெடுக்கும் வயோதிபத்- தாய்மாரையும் முதியோர்களையும் எமது வாழ்நாளில் எமது மண்ணில் நாம் கண்டு வந்திருகின்றோம்

கடல் மீது கலங்கி நின்று மனம் பயந்து வருணபகவானை நினைத்து அவருக்கு நேர்த்தி வைத்து தப்பிப் பிழைத்து ஊருக்கு திரும்பும் மக்கள் தமமைக் காப்பாற்றிய அகக்டற்தெய்வத்திற்கு நன்றிக்கடனாக தமது நேர்த்தியை நிறைவேற்றுவர். தம்மைக்காத்ததனால் தமக்கு காவல்காரனாக விளங்கும் வருணபகவானை மனதில் நினைத்து "கள்ளை அருந்திய பின்ஏற்படும் மயக்கத்தில்" (பிணர்பெண்ணைப் பிழிமாந்தி) வருணபகவானை தமக்கு உடையவனாக தமது காவல்காரனாக உருவகப்படுத்தி அவனை வணங்கினர். கடலோடிகளின் அவ்வகையான வணக்கத்தினால் **"வருணபகவான்"** என்னும் பெயர் மறைந்து **"காவல்க்காரன்"** என்னும் பெயர் நின்று நிலைத்துவிட்டது. எமது மண்ணில் பொதுவாகவே மீனவரும் கப்பல்வணிகர்களும் கடல்மீது பயணிப்பதால் தமக்குத் துணையான தமது காவல்தெய்வமான வருணபகவானை எப்பொழுதும் நினைத்து குறிக்கப்பட்ட உருவை வழிபட்டு இருப்பர். அவ்வுருவம் பின்நாட்களில் கடலோடிகளின் காவல்காரன் ஆக கப்பலில் செல்பவர்கள் வழிபடும் தெய்வம் என்பதால் **"கப்பல்க்கிழவன்"** என்ற பெயருடனும் நின்று நிலைத்துவிட்டது.

ஆரியப்பண்பாட்டிற்கு முந்திய வல்வெட்டித்துறை கடலோடிகளின் முதற்தெய்வமான கப்பல்கிழவன் என்னும் "வருணவழிபாடு" பின்வந்த காலங்களில் கடல் தாயான முத்துமாரியம்மன் வழிபாட்டால் பின்தள்ளப்பட்டு சைவசமய மறுமலர்ச்சியுடன் கூடிய ஆகமவிதி வழிபாட்டில் முன்வந்த விநாயகர் வணக்கத்தின் எழுச்சியில் இன்று அருகிவிட்டது. புலால்உண்பதும் கள்அருந்துவதும் எனத்தாம் உண்பதனையே ஆண்டவனுக்கும் படைப்பதே **"சங்ககால"** இயற்கைவழிபாடாகும். புலாலும் கள்ளும் மாமிசமும் தவிர்க்கப்பட வேண்டும் என்பது பின்வந்த சைவ ஆகமவிதியாகும்.. இவ்வகையில் கோவிலின் மூலஸ்தானத்தில் முதன்மைத்தெய்வமாக இருந்த **"கப்பற்ககிழவன்"** காவல்காரனாக கோவிலின் வாசலுக்கு படிஇறங்கியதும் இன்று புலால் தெய்வம் என்ற பெயரில் கோவிலின் வடகிழக்கு மூலையில் ஒதுக்கப்பட்டுள்ளதும் ஆகமவழிபாட்டின் ஆக்கிரமிப்பே அன்றி வேறில்லை.

**கப்பற்கிழவன்** என்பதும் **காவல்க்காரன்** என்பதும் ஒரேதெய்வமான போதிலும் இன்று பலரும் **"கப்பற்கிழவன்"** அங்கிருக்கும் விநாயகர் என எண்ணிவழிபடுவது மேலும் விந்தையானது. இவ்வகையிலேயே **வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் முதல்தெய்வமான வருணபகவானான கப்பற்கிழவனுடன் பின்வந்தபிள்ளையாரும் இணைந்து "கப்பலுடையபிள்ளையார்"** கோவில் என இக்கோவில் பெயர் பெறுவதாயிற்று

இவ்வாறு ஆரம்பகாலங்களில் கடற்தெய்வமான வருணனை வழிபட்டமக்கள் பின்நாட்களில் கடல்நீரையும் தெய்வமாக வழிபட்டார்கள். கடலலையை தாயாக போற்றும் இம்மக்கள் கடல்நீரையே தமதுதெய்வமாக வழிபட்டவர்கள் என்பதை பின்வரும் **"நற்றினை"** அடிகள் மூலம் நாம் அறியலாம்.

"தெண்டிரைப்
பெருங்கடற்பரப்பில் அமர்ந்துறை யணங்கே
இருங்கழிமருங்கின் நிலைபெற்றனையே"

அணங்கே = பெண்ணே
இருங்கழி = ஆழ்ந்தகடல்
தெண்டிரை = தெளிந்தகடல்அலை

"தெளிந்த அலைகளையுடைய பெரியகடலில் விரும்பி உறையும்
"கடல்பெண்ணே" ஆழ்ந்தகடலிலும் நிலைபெற்றனையே
என இதன் கருத்துஅமைகின்றது.

கடலைவணங்குவதும் அதற்குஅடையாளமாக கடல்நீரிற்கு நேர்த்திககடன் வைப்பதும் அதன்காரணமாக படையலிட்டுவணங்குவது அல்லது பலிகொடுப்பதும் இன்று எங்கும் அருகிவிட்டது. இற்றைக்கு சுமார் இருபத்தைந்து வருடங்களிற்கு முன்பும் கப்பலுடையவர் கோவிலின் முன்றலில் இத்தகைய வழிபாடுநடைபெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறை கப்பலுடையபிள்ளையார் கோவிலின் வடக்கு வாசலை அன்று அலங்கரித்துக்கொண்டிருந்த அரசமரநிழலில் ஆக்கப்படும் பலவித உணவுகளும் அதேவாசலில் கப்பல்கிழவனான **"வருணபகவானுக்கு"** படைக்கப்படும். பின்னர் கட்டுமரமாதிரியில் செய்யப்பட்ட சிறியபாய்மரமொன்றில் அனைத்து உணவுகளும் வைக்கப்படும்.

இதனைத்தொடர்ந்து படையலுடன்கூடிய அம்மாதிரிப்பாய்மரம் கரையில் இருந்து வட்டிஎனப்படும் கடல்அணைக்கு வெளியில் இழுத்துச்செல்லப்பட்டு ஆழ்கடலிற்குள் விடப்படும். பொதுவாகவே இயற்கை வழிபாடான சங்ககாலவழிபாட்டிலும் சரி அல்லது பின்புவந்த ஆகமவழிபாட்டிலும் சரி தெய்வத்திற்கு படைக்கப்படும் திருவமுதுகள் இறுதியில் பக்தர்களிற்கே உரியனவாகின்றன. ஆனால் இங்கு கடற்தாய்க்கு படைக்கப்படும் அனைத்துஉணவுகள் யாவும் கடலிற்கே உரியனவாகின்றன.

கடலின் சீற்றத்தினால் தமதுதொழிலில் ஏற்படும் பாதிப்பகளை தவிற்பதற்காக கடல்வணிகர்களும் கடல்மீது சென்று மீன்பிடிப்போர் தமதுவலைகளில் மீன்படுவது (மீன்அகப்படுவது) குறையும்போதும் **"ஓடாவியார்"**எனப்படும் படகுகளைச்செய்வோர் தமதுபடகுகள் கடல்மீது எவ்விதகுந்தகமும் நேராமல் பயணம் செய்வதற்காகவும் இவ்வாறான நேர்த்திக்கடன்களை கடல்தாய்மீது நிறைவேற்றுவர்.

**"ஓடாவி கந்தசாமி"என்பவரால் இறுதியாக இத்தகைய வழிபாடு கப்பலுடையபிள்ளையார் கோவில் முன்றலில் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது.எனினும் போர்க்காலச் சூழ்நிலையால் இவ்வழிபாடு முற்றுமுழுதாக இன்று மறைந்துவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை பேணப்பட்டு வந்த இவ்வகையான சங்ககால நடைமுறைகளின் மூலம் கடலோடிகளான வல்வெட்டித்துறை மக்களின் முதல் தெய்வமாக வருணபகவானான "கப்பலுடையவரும்" வல்வெட்டித்துறையின் முதற்க்கோவிலாக "கப்பலுடையவர்" கோவிலும் கருதப்படுகின்றது.**

**"தமிழ்நீ"பொன்.சிவகுமாரன்**